அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு இரண்டாம் எழுதின நிருபம்

பலவீனத்தில் பலம்

பலவீனத்தில் பலம்

- இந்த நிருபம் முழுவதிலும் நமது வாழ்க்கை எவ்வாறு செயற்படுகிறது என்று நாம் இயற்கையாக எதிர்பார்த்திருக்கிறோமோ அந்த எண்ணங்களை பவுல் தலைகீழாக மாற்றுகிறார்.
- உலகமும், நமது மனித மனங்களும் இயற்கையாக செயற்படுவதற்கு எதிரிடையாக தேவன் தாழ்மையானதை, உதாசீனப்படுத்தப்பட்டதை, பலவீனமா னதை கொண்டு தமது நோக்கங்களை நிறைவேற்றுகிறார்.
- 2 கொரிந்தியர் உபத்திரவத்தின் மூலமாய்
    - ஆறுதலும் (1:3-7),
    - குறைவின் மூலமாய் நிறைவும் (3:1-6),
    - மரணத்தின் மூலமாய் ஜீவனும் (4:7-15),
    - பாடுகளின் மூலமாய் ஆசீர்வாதங்களும் (6:3-10),
    - மனஸ்தாபத்தின் மூலமாய் இரட்சிப்பும் (7:2-10),
    - தரித்திரத்தின் மூலமாய் ஐசுவரியமும் (8:1–2,9,14),
    - கஷ்டங்கள் மூலமாக மேன்மைபாராட்டுதல் (11:16-30) உண்டாகும் என்று சொல்லுகிறது.
- 12ம் அதிகாரம் முக்கியமான கொள்கையை சொல்லுகிறது.
- பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் (12:9).
- பலவீனம் அதனளவில் நல்லதல்ல எனினும் தேவன் தமது கிருபையை, மகிமையை, வல்லமையை வெளிப்படுத்த அதையே தெரிந்துகொண்டார்.

ஒப்புரவாகுதல்

- விசுவாசிகளுக்குள் ஒப்புரவாகுதல் உண்டாகவேண்டும் என்பது கொரிந்தியருக்கான இரண்டாம் நிருபத்தை பவுல் எழுதியதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று.
- ஒதுக்கிவைக்கப்பட் சகோதரனோடு ஒப்புரவாக வேண்டியதின் அவசியத்தையும் (2கொரி 2:5-11), பவுலோடும் அவர்கள் ஒப்புரவாக வேண்டியதையும் (7:2-16) எழுதுகிறார்.
- ஒப்புரவாக தவறுவது சாத்தானால் மோசம்போக்கப்படுவதாகும் (2:11)
- விசுவாசிகள் உலகளாவிய திருச்சபையில் பிரிவினைகளையும், நெருங்கிய குடும்ப உறவுகளில் விரிசல்களையும் காண்கிற இக்காலத்தில் ஒப்புரவாகுதலை முன்னெடுத்தல் குறித்த பவுலின் மென்மையான வார்த்தைகள் கவனத்தில் கொள்ளபடவேண்டியவை.

பணியாள் தலைமைத்துவம்

- கொரிந்து சபையாருக்கு எழுதிய இரு நிருபங்களிலும். விஷேசமாக இரண்டாம் நிருபத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை நடத்துவது என்றால் என்ன என்பதை பவுல் பலமான உதாரணததை கொண்டு விளக்குகிறார்.
- எல்லாவற்றிக்கும் மேலாக கிறிஸ்தவ தலைவர்கள் கிறிஸ்து செய்ததை செய்ய வேண்டும். அன்பினால் ஏவப்பட்டவர்களாய் தங்கள் ஜீவனையே மற்றவர்களுக்காக தாரைவார்க்கிறவர்களாயிருக்க வேண்டும்.
- கிறிஸ்து செய்ததைப்போல பாவத்திற்கான நிவாரணத்தை கிறிஸ்தவர்களால் கொடுத்துவிட முடியாது. ஆனால் கிறிஸ்து காண்பித்த தியாக அன்பினால் ஏவப்பட்டவர்களாய் கிறிஸ்து செய்தமுடித்ததை அறிவிக்க வேண்டும் (4:10-12)
- நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; (1:6)
- நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம் (4:5).
- பணியாள் தலைமைத்துவம் என்பது உலகளாவிய திருச்சபைக்கான விருப்பத் தெரிந்தெடுப்பு அல்ல.
- அத உலகத்தின் சில பகுதிகளுக்கு மாத்திரம் தேவை, மற்ற பகுதிகளுக்கு தேவையற்றது என்பதுமல்ல. தேவனுடைய ஜனத்தை நடத்துகிற சகலருக்குமான உயரிய அழைப்பு.

கொரிந்தியருக்கு எழுதின நிருபங்கள்

- இந்த சபைக்கு பவுல் எழுதிய நிருபங்கள் மொத்தம் நான்கு

1. முன்பு எழுதிய நிருபம் என்று 1கொரி 5:9ல் குறிப்பிடப்படும் நிருபம்
2. 1வது கொரிந்திய நிருபம்
3. “கடுமையான, கண்ணீரின் கடிதம்” என்று வாணிக்கப்படும் 2கொரி 2:3-4ல் குறிப்பிடப்படும் நிருபம்
4. 2வது கொரிந்திய நிருபம்

- 1,2 கொரிந்திய நிருபங்கள் மாத்திரமே காலத்தால் அழியாமல் இருக்கின்றன.
- இல்லாமல்போன அந்த “கடுமையான கடிதத்தின்” ஒரு பகுதிதான் 2கொரிந்தியரின் 10-13 அதிகாரங்கள் என்பது பல வேத அறிஞர்களின் கருத்து.
- அதற்கு அவர்கள் முன்வைக்கும் காரணம் 1கொரிந்தியர் 1-9 அதிகாரங்களுக்கும் 10-13 அதிகாரங்களுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடு.
- முதல் பகுதியில் நம்பிக்கை வெளிப்படுகிறது அடுத்த பகுதியில் அவநம்பிக்கை வெளிப்படுகிறது.
- ரோம மற்றும் கொலோசேய நிருபங்களை போலல்லாது 1கொரிந்திய நிருபம் பவுலால் நன்கு அறியப்பட்டவர்களுக்கு எழுதப்பட்டது. பவுலுக்கும் அவர்களுக்கும் இடையே இருந்த அறிமுகம் இந்த நிருபத்தில் தெளிவாக காணப்படுகிறது. குறிப்பாக பவுல் ஒரு தகப்பனைப்போல சொல்லும் அறிவுரைகள் (4:14,4:21,11:1-2)

கொரிந்தியருக்கு எழுதின நிருபங்கள்

- ஆரம்பத்தில் பவுல் அவர்கள்மேல் 'எல்லாவிதத்திலும் திடநம்பிக்கை' உடையவராக உற்சாமுள்ளவராக இருந்தார் (2கொரி 7:16). ஆனால் பின்பு அவர் "நான் வந்து, உங்களை என் மனதின்படியிருக்கிறவர்களாகக் காணமலிருக்க" நேரிடுமோ என்கிற சந்தேகத்தையும் வெளிப்படுத்துகிறார் (2கொரி 12:20)
- இந்த நிருபம் பவுலின் நிருபங்களின் வழமையான அமைப்பில் எழுதப்பட்டுள்ளது.
  - ஆரம்பப் பகுதி (1கொரி 1:1-3: 2கொரி 1:1-2)
  - நன்றி தெரிவித்தல் (1கொரி 1:4-9: 2கொரி 1:3-11)
  - நடுப்பகுதி (1கொரி 1:10-16:18: 2கொரி 1:12-13:10)
  - முடிவுப் பகுதி (1கொரி 16:19-24: 2கொரி 13:11-14)

1 கொரிந்தியர்

- கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் ஆவிக்குரிய குழப்பத்தில் இருக்கும் சபைக்கு எழுதப்பட்ட மேய்ப்பனின் கடிதம்.
- அந்த சபையை சேர்ந்த ஒருவரோடு தொடர்பிலிருந்த குலோவேயாளின் வீட்டாரால் பவுலுக்கு சில செய்திகள் அறிவிக்கப்பட்டது (1:11).
- அவராலே சில காலங்களுக்கு முன்னர்தான் ஆரம்பிக்கப்பட்ட சபை (அப் 18:1-17) அதற்குள்ளாக பிரிவினை உருவாகிவிட்டிருந்ததை அறிந்து அந்த சூழ்நிலைளை சரிசெய்ய முற்படுகிறார்.
- கொரிந்திய சபையிடமிருந்து வாய்மொழி அறிக்கையும், எழுதப்பட்ட கடிதம் ஒன்றையும் அவர் பெறுகிறார்.
- இவற்றில் இருந்து சபையானது பிரிவினைகள், ஒழுக்கமின்மை, கர்த்தரின் பந்தி துஷ்பிரயோகம் செய்யப்படுதல், ஆவியின் வரங்கள் பற்றிய அறியாமை என்பவற்றோடு உயிர்த்தெழுதல் பற்றிய குழப்பத்திலும் இருந்தது தெரியவருகிறது. இவற்றை கண்டுகொள்ளாதவர்போல இராமல் இந்த பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தீர்வுகளை முன்வைக்கிறார்.
- கிறிஸ்தவர்களுக்கும், அன்னிய தெய்வங்களை தொழுதுகொள்ளும் கலாச்சாரத்தில் இருகிறவர்களுக்கும் இடையோன காரியங்கள் குறித்து இந்த நிருபத்தில் எழுதப்பட்டிருப்பதால் இந்த நிருபம் இன்றைய காலத்திற்கும் பொருத்தமான நிருபம்.
- கிறிஸ்தவர்கள் தங்களுக்காக வகுக்கப்பட்ட கிறிஸ்தவ இலட்சியங்களுக்காக வாழ்வார்கள் அல்லது அவர் குறிப்பிடுவது போல‘கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர் களே; உங்கள் சரீரத்தினால் தேவனை மகிமைப்படுத்துங்கள்’(6:20) என்பதற்கேற்ப நடப்பார்கள் என்பது அவரது எதிர்பார்ப்பார்ப்பாயிருந்தது.

பிரச்சினைகள் & உபதேசங்கள்

பிரச்சினைகள்

1. சபைக்குள் பிரிவினைகள் 1:10-4:21
2. சபைக்குள் ஒழுக்கமின்மை 5:1-13
3. வழக்காடும் சபையாகிய சரீரம் 6:1-8
4. பரிசுத்த குலைச்சல் 6:9-20

உபதேசங்கள்

1. விவாகம் பண்ணுதல் குறித்து 7:1-40
2. விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவை குறித்து 8:1-11:1
3. பொதுவான வழிபாடு குறித்து 11:2-14:40
4. உயிர்த்தெழுதல் குறித்து 15:1-58

சபைக்குள் பிரிவினைகள் 1:10-4:21

- கொரிந்திய சபையார் குழுக்களாக பிரிந்திருந்து ஒருவரோடோருவர் சண்டைபண்ணி க்கொண்டாகள். ஒரு குழு தங்களது தலைவர் பவுல்தான் என்றும், அடுத்த குழு வாதத்திறமையுள்ள அப்பொல்லோவே தங்களது தலைவர் என்றும், இன்னொரு குழு அசலான அப்போஸ்தலனான கேபா(பேதுரு)வை சேர்ந்தவர்களென்றும், இன்னொரு குழுவோ நாங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சேர்ந்தவர்களென்றும் சொல்லிக்கொண்டார்கள் (1 கொரி 1:12)
- இவ்வாறு கொரிந்திய சபையானது பிரிந்து ஒரு தலைவர் மற்றவரிலும் மேன்மையானவர் என்று பெருமைபேசினார்கள். அதிலே நாங்கள் கர்த்தராகிய இயேசுவை அல்லது கிறிஸ்துவின் ஊழியக்காரர்களை பின்பற்றியதால் தாங்களே சிறந்தவர்கள் என்று சொல்லிக்கொண்ட கூட்டத்தாரும் இருந்தார்கள் (2கொரி 11:23)
- பவுல் அவர்களது முதிர்ச்சியின்மையை கடிந்துகொண்டு (3:3) தேவனாகிய கர்த்தர் ஒருவருக்கே கனத்தைக் கொடுக்க வேண்டுமேயன்றி அவரது ஊழியக்காரர் களுக்கல்ல என்பதை தெளிவுபடுத்தினார்(3:5-7)
- கொரிந்திய சபையின் பிரச்சினைக்கு முக்கிய காரணம் அவர்கள் தங்கள் விசுவாசத்தை மனிதர்களின் ஞானத்தின்மேல் வைத்தார்கள்.
- மனுஷனுடைய ஞானம் தேவனுடைய பைத்தியம்(1:25) என்பதையும் அவர்களது விசுவாசம் தேவபெலத்தினால் உண்டானதாயிருக்க வேண்டும்(2:5) என்பதையும் பவுல் சுட்டிக்காட்டினார்.
- அவர்கள் சுவிஷேசத்தின் தன்மையை சரியாக புரிந்துகொண்டிருக்கவில்லை என்பதே பவுலின் வாதம்.
- அடுத்துவரும் மூன்று பத்திகளில் பவுல் முதலாவதாக மேசியா சிலுவையில் அறையப்படுவது கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாய் இருப்பதையும்(1:18-25), இரண்டாவதாக அவர்கள் தகுதியற்றவர்களாயிருந்தும் தேவன் அவர்களை தெரிந்தெடுத்திருந்ததையும் (1:26-31), மூன்றாவதாக தேவன் அவர்களை எவ்வாறு பயன்படுத்துகிறார் பவுலை அவரது பலவீனத்திலும் பயன்படுத்துவதை (2:1-5) குறிப்பிடுகிறார்.
- 3:6ல் நட்டுதல், நீர்ப்பாச்சுதல்: 3:9ல் தேவனுக்கு உடன்வேலையாட்கள்: 4:1ல் ஊழியக்காரனும் உக்கிராணக்காரனும் என்னும் உதாரணங்களை பவுல் காண்பித்து தனக்கும், அப்பல்லோவுக்கும் இவற்றை திருஷ்டாந்தங்களாக காண்பித்து தாங்களிருவரும் தேவனின் வாய்கால்கள் என்பதை விளக்குகிறார்.

சபைக்குள் ஒழுக்கமின்மை & வழக்காடும் சபையாகிய சரீரம்

B. சபைக்குள் ஒழுக்கமின்மை 5:1-13

- சபை பாலியல் ஒழுக்கக்கேட்டை கண்டுகொள்ளாமல் இருந்தது. ஒருவன் தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருத்தான்(5:1), சிலர் வேசிகளோடு இசைந்திருந்தார்கள்(6:16-18) இதிலே மோசமானது என்னவென்றால் தவறுசெய்கிறவர் களை விசாரிக்கவில்லை (5:1-2).
- 5:3-8ல் ஒழுக்கக்கேடாக நடந்த மனிதனை சபைக்கு புறம்பாக்கி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதின் அவசியத்தையும், அவ்வாறு செய்யாதபட்சத்தில் சபையாகிய சரீரத்தின் மற்றபகுதிகளையும் அவன் கெடுத்துவிடுவான் என்பதை பவுல் எழுதினார்.
- 5:9ல் குறிப்பிடப்படுகிற நிருபத்தில் எழுதிய விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்பதை அவர்கள் தவறாக புரிந்துகொண்டிருந்தார்கள்.
- 5:10ல் சொல்லப்பட்டபடி அது அவிசுவாசிகளை குறிக்கவில்லை. அவர்களை விட்டு பிரிந்திருப்பது எந்த சாட்சியையும் உண்டாக்காது.

C. வழக்காடும் சபையாகிய சரீரம் 6:1-8

- சபை தனக்குரியவர்களை வேதவசனத்தின் அடிப்படையில் நியாயந்தீர்கவில்லை.
- மாறக சக கிறிஸ்தவர்களோடான வழக்குகளை தீர்த்துக்கொள்ள நகரத்து நீதிமன்றங்களை நாடினார்கள் (6:5-7)
- ஒருநாளில் தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்பார்கள் என்பதை அவர்கள் அறிந்து தங்களுக்குள் உண்டாகிற வழக்குகளை தாங்களே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பது பவுலின் வாதம்

D. பரிசுத்த குலைச்சல் 6:9-20

- கொரிந்திய சபையில் இருந்த சிலர் வேசிகளிடம் சென்று வந்ததோடு கிறிஸ்துவுக்குள் தங்களுக்கு சுயாதீனம் இருப்பதால் தங்களுக்கு அவ்வாறு செய்ய உரிமையுண்டு என்று கிறிஸ்தவ விடுதலையை குறித்த தவறான கருத்தியலை கொண்டிருந்தார்கள்.
- அவர்களது அதிகாரம் அது தகுதியானதா அல்லது அடிமைப்படுத்துகிறதா என்கிற வரையறைக்குட்பட்டது என்று பதிலளிக்கிறார் (6:12).
- தேவனுடைய அதிகாரத்தை உணர்ந்தவர்களாக சரீரங்களால் தேவனை மகிமைப் படுத்துங்கள் என்று பவுல் வழிகாட்டுகிறார் (6:19-20).
- விவாகம், விவாகரத்து, புசித்தல்-குடித்தல் போன்றவற்றில் தங்களுக்கு இருக்கும் சுயாதீனம் குறித்து பவுலிடத்தில் கேள்விகள் கேட்டு எழுதியிருந்தார்கள்.
- பவுல் ஒவ்வொன்றிற்கும் விபரமாக விளக்கம் கொடுத்துவிட்டு புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் என்ற கிறிஸ்தவத்தின் நிலைப்பாட்டை முடிவாக தெரிவிக்கிறார் (10:31).

A. விவாகம் பண்ணுதல் குறித்து 7:1-40

1. விவாகம்பண்ணாதிருத்தல் 7:1-9, 25-40

- சிலர் துறவுநிலையை மேற்கொள்வது அவசியம் என்றும் ஆகவே விவாகம் செய்தாதிருப்பதை விசுவாசிகள் பின்பற்றவேண்டும் என்றும் கருதினார்கள்.
- அது நல்லதுதான் என்று பவுல் ஏற்றுக்கொண்டார் (7:1.6) அவரைப்போல எல்லோரும் அந்த விஷேசவரத்தை உடையவர்களாயிருப்பது நல்லது என்றும் அவர் சொன்னார் (7:7)
- அவ்வாறு இருந்தால் தேவனுடைய பணிக்கு தங்களை முழுவதம் அர்ப்பணிக்கலாம் (7:34)
- ஆனாலும் அவ்வாறு செய்யவேண்டும் என்பது விதிமுறையல்ல என்பதோடு அவ்வாறு செய்யவேண்டும் என்று கட்டளையிடப்படவுமில்லை (7:6,25)
- அதுவுமல்லாமல் அந்த விவாகம் செய்யாதவரம் இல்லாதுபோனால், அந்த நிலையில் தொடர்ந்து அவர்களால் இருக்கமுடியாது போனால் அது அவர்களை ஒழுக்கக்கேட்டிற்கு இட்டுச்செல்லும் (7:9)
- பிரிந்திருக்க வேண்டும் என்று ஒருவரால் ஒருதலைப்பட்சமாக எடுக்கப்படும் முடிவு சுயத்தை மையப்படுத்தியதாக அமையுமேயன்றி கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ ஊழியஞ்செய்வதாய் அமையாது.

A. விவாகம் பண்ணுதல் குறித்து 7:1-40

2. விவாகரத்து 7:10-24

- பவுல் விசுவாசி அவிசுவாசியை திருமணம் செய்திருக்கும் சூழ்நிலையையும் விபரிக்கிறார்.
- தேவனுடைய கட்டளையானது விவாகத்தை விட்டு பிரிந்துபோகுதல் என்பதாய் இராததால் விவாகத்தை விட்டு பிரியக்கூடாது.
- மாறாக அவர்கள் ஒருவரோடொருவர் வாழ்ந்து அவிசுவாசியை கிறிஸ்துக்கென்று ஆதாயப்படுத்த முயற்சிக்க வேண்டும்.
- கிறிஸ்தவர்களானபோது என்ன நியையில் இருந்தார்களோ அந்த நிலையிலேயே இருக்கவேண்டும் என்பதையும் பவுல் கூறுகிறார்.
- கிறிஸ்தவம் நம்மை உலகைவிட்டு எடுக்கும்படி வடிவமைக்கப்படவில்லை.
- அதிலே வாழவே கிறிஸ்தவம் நமக்கு உதவிசெய்கிறது.
- தேவனுடைய பிள்ளைகளை மோசேயின் சட்டங்கள் தற்போது கட்டுப்படுத்தா விட்டாலும் (7:19) அந்த சட்டங்களின் உட்கருத்தாகிய "அவர்கள் பிரித்தெடுக்கப்பட்ட வர்கள்"- அவர்களது கலாச்சார பின்னணிகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்கள் என்பது மாறிப்போகவில்லை (5:1–2,13,7:19,10:1–5).

B. விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவை குறித்து 8:1-11:1

- கொரிந்தியர்களில் சிலர் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட இறைச்சியை உண்பது தவறு என்று நினைத்தார்கள். அன்னிய தெய்வங்கள் அந்த இறைச்சியை மாசுபடுத்தியிருக்கும் ஆகவே அதை உண்பது தேவனை அவமதிப்பதாகும் என்பது அவர்களது எண்ணம். வேறுசிலரோ தெய்வம் என்பது ஒன்றுதான் என்பதால் அவ்வாறு உண்பது தவறல்ல என்று நினைத்தார்கள். இவ்வாறு நினைத்தவர்கள் தாங்கள் ஞானவான்கள் என்று தங்கள் அறிவை புகழ்ந்துகொண்டார்கள். பவுலின் கருத்து யாதெனில் ஞானமுள்ளவர்கள் அன்பைக் கைக்கொண்டு விலகியிருக்க வேண்டும்.
- பவுல் தனது விவாதத்தை மேற்கொண்டு விரிவாக்க தமது சொந்த செயல்களை உதாரணமாக எடுத்துக்கொள்கிறார். அப்போஸ்தலனாக அவருக்கு இருந்த சமூக அந்தஸ்தை அவர் பயன்படுத்திக்கொள்ளாமல் தனக்காக தானே வேலை செய்தார் (9:1-18). பவுலின் தாழ்மையின் உதாரணத்தை அவர்கள் பின்பற்றவேண்டும். பவுல் யூதனானபோது யூதர்களை ஆதாயப்படுத்த அவர்கள்மேல் அன்பை வெளிப்படுத்தினார், புறஜாதிகளை ஆதாயப்படுத்த புறஜாதியாரைப்போலானார். பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானார்.
- சகோதரனுக்கு இடறலுண்டாகாவிட்டால் விக்கிரகத்திற்கு படைக்கபட்ட இறைச்சியை புசிக்க அனுமதிக்கப்பட்டாலும், விக்கிரக தெய்வங்களுக்குக்கான விழாக்களில் அவர்கள் பங்கெடுப்பது அனுமதிக்கபடவில்லை (10:14-22). தேவனை மகிமைப் படுத்துகிற காரியங்களில் மாத்திரமே பங்கெடுத்துக்கொள்ள பவுல் அவர்களை வலியுறுத்துகிறார் (10:23-33)

C. பொதுவான வழிபாடு குறித்து 11:2-14:40

1. பெண்களின் பங்கு 11:2-16

- கிறிஸ்துவுக்குள் தாங்கள் பெற்ற வித்தியாசமின்மையை (கலா3:8) கணக்கில்கொண்டு சில பெண்கள் தாங்கள் புருஷன்மாருக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்கிற நியதியை மறந்தார்கள்.
- தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதும், ஜெபிக்கிறபோதும் தலையை முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்ற சபையில் கடைப்பிடித்துவந்த வழக்கத்தை விட்டுவிட்டார்கள் (11:16)

2. கர்த்தருடைய பந்தி 11:17-34

- வச21ல் பவுல் சொல்லுகிறார் "ஒருவன் பசியாயிருக்கிறான். ஒருவன் வெறியாயிருக்கிறான்"
- பவுல் கர்த்தரின் பந்தியின் முக்கியத்துவத்தையும், அதில் தவறாக பங்கெடுப்பதன் ஆபத்தையும் நினைவூட்டுகிறார் (11:30)
- அவர்கள் தாங்களே தங்கள் பாவங்களை ஆராய்ந்து பார்க்க வலியுறுத்துகிறார் (11:28,31)
- கர்த்தரின் பந்தியானது ஐக்கியத்தின் அடையாளம் (11:33) என்பதை உணர்ந்து பங்கெடுக்க வலியுறுத்துகிறார்.

3. ஆவிக்குரிய வரங்களை பயன்படுத்தல் 12:1-14:40

- மூன்றாவதாக ஆவிக்குரிய வரங்களை தவறாக பயன்படுத்துவத குறித்த கவலை. குறிப்பாக அன்னியபாஷை பேசுதல். அன்னியபாஷை பேசுதல் முக்கிய வரமாக கருதப்பட்டு அவ்வாறு பேசியவர்கள், பேசாதவர்களைவிட உயர்ந்த ஆவிக்குரியவர்களாக கருதப்பட்டார்கள்.
- ஆவிக்குரிய செயற்பாட்டின் முக்கிய நோக்கம் இயேசுவை ஆண்டவராக உயர்த்துவதுதான். அதைவிட்டு விலகுகிறபோது அது வெறும்சடங்காக மாறிவிடும்.

C. பொதுவான வழிபாடு குறித்து 11:2-14:40

இதை விளக்குவதற்காக பவுல் சரீரத்தை உதாரணமாக காண்பித்து எல்லா ஆவிக்குரிய வரங்களும் முக்கியமானதே என்பதை உணர்த்துகிறார்.

- ஆவிக்குரிய வரங்கள், அன்னிய பாஷை போன்றவற்றின் மையக்கருத்து அன்பு என்பதே பவுலின் கருத்து. அன்னிய பாஷை பேசுவது நல்லது (வச 5)
- அது பேசுகிறவருக்கு பக்திவிருத்தியை உண்டாக்கும் (வச 4) என்பது பவுலின் வாதம்.
- ஆனால் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப்பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்க தாகப் பேசுகிறதால் தீர்க்கதரிசன வரத்தை நாடும்படி சொல்லுகிறார்(வச 3-4).
- பவுல் இதற்கு உதாரணமாக வாத்திய கருவிகள் வாசிக்கப்படுவதை குறிப்பிடுகிறார். ஒழுங்கற்று வாசிப்பதால் இசையை ரசிக்கமுடியாததுபோல (வச 7-8) அன்னியபாஷை வியாக்கியானப்படுத்தப்படாவிட்டால் அதில் பிரஜோனமில்லை.
- கொரிந்திய சபையில் அன்னிய பாஷைக்கு வியாக்கியானம் அளிக்கபடவில்லை என்று தோன்றுகிறது.
- அந்நியபாஷைகள் விசுவாசியாத யூதர்களுக்கு அடையாளமாயிருக்கிறது(வச 21-22) என்று பவுல் குறிப்பிடுகிறார்.
- அங்கு கூடிவருகிறவர்கள் விசுவாசிகளாயிருக்கிறதாலே விசுவாசிகளுக்கு நேரடியான தீர்க்கதரிசனத்தை சொல்லுவதற்கே முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.
- அவிசுவாசி ஒருவன் வந்திருப்பானானால் அவன் உபதேசத்தினால் பலனடைவான் (வச 24)

D. உயிாத்தெழுதல் குறித்து 15:1-58

- கொரிந்தியர்களில் சிலர் மரித்தவர்களின் உயிாத்தெழுதல் இல்லை என்று சொன்னார்கள் (15:12).
- பவுல் அவர்களது இந்த எண்ணத்தினால் எற்படுகிற விளைவை அவர்கள் அறியவில்லை என சுட்டிக்காட்டுகிறார். காரணம் அது கிறிஸ்துவின் உயிர்தெழுதலையும் மறுதலிப்பதோடு அவர்களின் சொந்த இரட்சிப்பையும் கேள்விக்குள்ளாக்குகிறது.
- மரணத்திற்கு பின்பான ஜீவன் இல்லாதிருக்குமானால் நாம் பரிதபிக்கப்பட்டவர்களாயிருப்போம் (15:19) காரணம் கிறிஸ்துவுக்காக பட்ட பிரயாசைகள் பலனில்லாமல் போய்விடுமே.
- கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நித்திரையடைந்தவர்களில் முதல்பலன் என்பது பவுலின் வாதம் (வச 22,23).
- மரணத்தில் நின்று உயிர்த்தவர்களில் கிறிஸ்து முதலானவர் அல்ல.
- எலியா, கிறிஸ்து, பவுல் மரித்தோரை உயிரோடு எழுப்பியிருக்கிறார்கள்.
- ஆனால் கிறிஸ்துவின் உயிாத்தெழுதலோ இனி மரணத்தை காணாத உயிர்த்தெழுதல். அதை மற்றவர்கள் பின்தொடருவார்கள் (வச23) உண்மையாகவே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்தான் நமது வெற்றியும் நமது நம்பிக்கையும் (வச 51-58).

முடிவுப்பகுதி 16:1-24

பவுல் நடைமுறைக் காரியங்களை சொல்லி இதை நிறைவு செய்கிறார்.

A. கொடுத்தல் 16:1-4

எருசலேம் சபைக்கு பணம்சேர்ப்பதை குறித்து பவுல் எழுதுகிறார். வாரத்தின் முதல்நாள்தோறும் அதை சேர்ப்பதை வழக்கமாக்கிக்கொள்ள வழிகாட்டுகிறார் (16:2)

B. பவுலின் வருகை 16:5-9

பவுல் மீண்டும் வந்து நீண்டகாலம் அவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய விரும்புவதை தெரிவிக்கிறார்.

C. தீமோத்தேயுவையும், அப்பொல்லோவையும் நடத்தவேண்டிய விதம் 16:10-12

பவுல் கொரிந்திய சபையார் தீமோத்தேயுவையும், அப்பொல்லோவையும் நடத்தவேண்டிய விதம் குறித்து குறிப்பிடுகிறார். பல பிரிவினைக்குழுக்கள் உள்ள சபையில் ஊழியஞ்செய்வது இலகுவானதல்ல. இந்த நிருபம் படிக்கப்பட்டு அதன்படி நடக்கிற வரையில் அப்பொல்லோ திரும்பிபபோக விரும்பவில்லை என்பதை பதிவுசெய்கிறார்(6:12). தீமோத்தேயுவுக்கும் இந்த எண்ணமே இருந்திருக்கும் என்பதை ஊகிக்கமுடிகிறது. ஆகவே தேவனுடைய வேலையை செய்கிற இவர்களை கனத்துடன் நடத்த விண்ணப்பிக்கிறார்.

D. வாழ்த்துதலும் ஆசீர்வாதமும் 16:13-24